**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 26/2019**

தேதி : 31.10.2023 .

பெயர் : வசந்தி PW2

குறுக்கு விசாரணை

நான் மோகன்தாஸ் என்பவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்து சாட்சியம் சொல்ல வந்தேனா என்றால் இல்லை. வாதிதான் என்னை சாட்சியம் சொல்ல வரச்சொன்னார். இந்த வழக்கு யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் மற்றும் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் புல எண் மற்றும் அதன் நீளம் அகலம் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்து ஆரம்பத்தில் தங்கராசு என்பவருக்கு பாத்தியப்பட்டது. தங்கராசுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்காக ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சொத்து தங்கராசு பரம்பரைச்சொத்தாகும். தங்கராசுக்கு உடன்பிறந்தவர்கள் யார் யார் என்றால் ஒரு சகோதரர் உள்ளார், சகோதரிகள் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. தங்கராசுவின் சகோதரரின் பெயர் மோகன்தாஸ். தங்கராசுவின் தந்தையார் பெயர் தெரியாது. தங்கராசுவின் சகோதரர் தான் வாதி மோகன்தாஸ் ஆவார். மோகன்தாஸ் எனக்கு பங்காளி முறையாவார். நான் மோகன்தாஸிடமிருந்து இரண்டு பத்திரங்கள் மூலம் சொத்து கிரயம் பெற்றுள்ளேன். மோகன்தாஸீக்கு தாவா சொத்து அவரது சகோதரர் தங்கராசு மூலம் கிடைத்தது. அதற்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய பத்திரத்தில் மோகன்தாஸ்க்கு சொத்து எப்படி கிடைத்தது என கூறப்பட்டுள்ளது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தங்கராசுவிடமிருந்துதான் தாவா சொத்தை மோகன்தாஸ் கிரயம் பெற்றார் என்ற விபரம் மட்டும் தான் தெரியும். நான் சொல்லுவதுபோல் தங்கராசுவிடமிருந்து மோகன்தாஸ் தாவா சொத்தை கிரயம் பெறவில்லை என்றாலும். அதுபோன்ற எந்த வாசகமும் நான் பெற்ற கிரய ஆவணமான வாசாஆ 1 ல் காணப்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவாசொத்திற்கு

எவ்வளவு கிரயதொகை பெறப்பட்டது. எந்த இடத்தில் பெறப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவருக்குதான் தெரியும். எனது கணவர் பெயர் இராஜேந்திரன். அவரது தகப்பனார் பெயர் இராமலிங்கம். வாசாஆ 1 பதிவுசெய்யப்பட்டபோது எனது கணவர் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு சென்றார். வாசாஆ 1ல் அவர் சாட்சி கையொப்பம்செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ 1ல் யார், யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்தை நான் கிரயம் வாங்கும்போது மூங்கில் மரங்கள் இருந்தன. எவ்வளவு வருட மரம் என்று எனக்கு தெரியாது. வாசாஆ 1ன்படி பட்டா என் பெயரில் மாற்றம் ஏற்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற சொத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். தாவாசொத்திற்கு கீழ்புறம் சந்தும் உள்ளது. சந்துக்கு கிழக்கால் யார் இடம் என்றால் இராமாமிர்தம் இடம் உள்ளது. இராமாமிர்தத்திற்கு சந்துக்கு கிழக்கால் உள்ள இடத்தை தவிர வேறு இடம் உள்ளதா என்றால் இல்லை. மோகன்தாஸ் இடத்திற்கு தென்புறம் ஜானகி அம்மாள் இடம் உள்ளது. ஜானகி அம்மாள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மோகன்தாஸ் இவ்வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் இருந்துதான் வாசாஆ 2 ஏற்பாடுகளை செய்தார். வாசாஆ 2ற்காக எனது கணவர் ரூ.65,000/- பெற்றுக்கொண்டார். மோகன்தாஸக்கு நான் கிரயம் கொடுக்கும்போது தாவா சொத்தில் மூங்கில் மரங்கள் இருந்தன. எத்தனை மூங்கில் குத்துகள் இருந்தது எத்தனை மரங்கள் இருந்தன என்றால் சுமார் 7, 8 மூங்கில் குத்துகள் இருந்தன. எத்தனை மரங்கள் என்று தெரியாது. தற்போது தாவா சொத்தில் மூங்கில் குத்துகள் இல்லை. காலி மனையாக உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு கொல்லைபுறத்தில் தான் தாவா சொத்து உள்ளது. எனது வீட்டிலிருந்து பார்த்தால் தாவா சொத்து தெரியும். அந்த மரங்களை யார் வெட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. யார் மூங்கில் மரங்களை வெட்டினார்கள் என்ற விபரதததை வாதி என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. வாசாஆ 2ன் சொத்து விபரத்தில் காலி மனை, வீடு இல்லை, மரம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்பது பற்றி அதில் உள்ள மூங்கில் மரங்களை யார் வெட்டினார்கள் என்ற விபரம்

எனக்கு தெரியா என்றாலும் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் வாசாஆ 2 ஆன கிரயப்பத்திரத்தில் கையெப்பம் செய்து கொடுக்க சொன்னார் அதனால் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். மோகன் தாஸ் எனது உறவினர் என்பதால் பிரதிவாதியிடமிருந்து அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக எனது கணவரும் மோகன்தாஸம் சேர்ந்து மோசடியாக வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ஆவணங்களை தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மோகன்தாஸக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.